[1996 ஆகஸ்ட் 21

3. கவன ஈர்ப்பு

ஆசிரியர் பயிற்சி பெற்றோர் சான்றிதழ் பெற முடியாதது குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து பேரவை விதி 55-ன் கீழ் கவன ஈர்ப்பு. திரு. ச. அழகிரி அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "ஆசிரியர் பயிற்சி பெற்ற ஆயிரக்கணக்கான மாணவர்கள் சான்றிதழ் பெற முடியாமல், இரண்டாம் ஆண்டுப் படிப்புத் தொடர முடியாதது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

முற்பகல் 11-40

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளிலே படித்து, பயிற்சியை முழுவதும் பெறவில்லை என்பது ஒரு கருத்து. அவர்கள் தேர்வு எழுத அனுமதிக்கப்படவில்லை என்பது ஒரு நிலை. அதற்குப் பின்னர் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டவர்களுக்கு முடிவுகளை அறிவிக்கக்கூடாது என்பது நீதிமன்றத்தினுடைய ஒரு முடிவு. இவைகளைப்பற்றிய பின்வரும் விரிவான அறிக்கை இந்த அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையிலே முழு விளக்கமும் இருக்கிற காரணத்தினால் அந்த அறிக்கையிலே தரப்பட்டிருக்கின்ற செய்திகளின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் வேறு விவரம் வேண்டுமானால் கேட்கலாம்.

அறிக்கை

1978-க்கு முன்னர் தனியார் நிர்வாகத்தின் கீழ் 42 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களே இருந்தன. அதன் பின்னர் சில சிறுபான்மை இனத்தினர் "சிறுபான்மை" யெனக் கூறிக் கொண்டு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளைத் தாமாகவே திறந்துவிட்டு அதன்பின்னர் அரசின் அனுமதிக்கு வந்த வண்ணம் இருந்தனர். இதனைத் தடுக்கும் பொருட்டு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளைத் துவக்குவதற்கான விதிமுறைகளை அரசு, அரசாணை நிலை எண் 535/536, கல்வி, நாள்: 17-5-1989-ல் வகுத்தது. இந்த

1996 ஆகஸ்ட் 21] [பேராசிரியர் க. அன்பழகன்]

விதிமுறைகளை சிறுபான்மை நிறுவனங்களுக்கு பொருந்தச் செய்ய இயலாதென உயர்நீதிமன்றம் சென்றனர். அந்த விதிமுறைகள் சிறுபான்மை நிறுவனங்களுக்கும் பொருத்தும் என உயர்நீதி மன்றம் 22-3-1993 அன்று கூறிவிட்டது. உச்ச நீதிமன்றத்துக்குச் சென்ற போது கூட உயர்நீதிமன்றத் தீர்ப்பே 15-6-1993 அன்று நிலை நிறுத்தப்பட்டது.

இதனிடையே சில நிர்வாகத்தினர் (சிறுபான்மை நிர்வாகம் உட்பட) ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை அரசாணை நிலை எண் 535, கல்வி, நாள்: 17-5-1989 விதித்த விதிகளைக் கருத்திற் கொள்ளாமல் கோர்ட் மூலம் அனுமதி பெற்றும் துறை மூலம் அனுமதி பெற்றும் திறந்த வண்ணம் இருந்தனர். அதன்படி கோர்ட் மூலம் 102 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களும், துறை மூலம் 117 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களும் ஆக 219 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் திறக்கப்பட்டன. (1989 முதல் 1992 வரை) இந்த ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் அனைத்தும் அரசாணை நிலை எண் 535, 536, கல்வி, நாள் 17-5-1989-ல் நிர்ணயித்த விதிமுறைகளைக் கடைபிடிக்கவில்லையென உயர்நீதி மன்றத்தில் பி.எம். ஜோசப் என்பவர் வழக்குத் தொடர்ந்தார். (ரிட் பெட்டிஷன்) நெ.9494/92 இந்த வழக்கை விசாரித்த உயர்நீதி மன்றம், விதிமுறைகளைப் பின்பற்றாமல் அளிக்கப்பட்ட 219 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களின் அங்கீகாரங்களை 27-4-1993 அன்று ரத்து செய்தது.

உயர்நீதி மன்றத்தின் தீர்ப்புச் சுருக்கம் வருமாறு:-

" If the students of the institutions whose recognition has now been quashed. have already written the examinations, the results thereof shall be published by the respondents. But, the publication will not confer any right whatever on the institutions or their students to get any consequential relief or benefit such as issue of diploma or certificate, etc. "

உச்ச நீதிமன்றதிற்குத் துறை சென்றபோது கூட உயர்நீதி மன்றத் தீர்ப்பே 15-6-1994 அன்று நிலைநிறுத்தப்பட்டது.

உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்புச் சுருக்கம் வருமாறு:-

Before we part with this judgement, we consider it necessary to strike a note of caution in respect of passing of interim orders by Courts directing the students of unrecognised institutions, to appear at the examinations concerned, in view of the series of judgements of this court, the Courts should not issue fiat to

allow the students of unrecognised institutions to appear at the different examinations pending the disposal of the writ applications. Such interim orders affect the careers of several students and cause unnecessary embarrassment and harassment to the authorities, who have to comply with such directions of the Court".

இந்தத் தீர்ப்புகளால் அந்த 219 நிறுவனங்களில் படித்த கீழ்க் குறிப்பிட்ட எண்ணிக்கை கொண்ட மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(1) பயிற்சி முடித்துத் தேர்வு எழுதி சான்றிதழ் பெற இயலாதவர்கள்	15,270 பேர்
(2) முதலாம் ஆண்டுப் பயிற்சி முடிக்காதவர்கள்	8,888 பேர்
(3) இரண்டாம் ஆண்டுப் பயிற்சி முடிக்காதவர்கள்	4,208 பேர்
	28,366 பேர்

இந்த எண்ணிக்கையானது ஒரு பயிற்சி நிறுவனத்துக்கு மாணவர் சேர்க்கை 40 என்ற அனுமதியின் அடிப்படையில் கணக்கிடப்பட்டது. ஒரு சில நிறுவனங்கள் முறையாக அனுமதிக்கப்பட்ட இடங்களுக்கும் அதிகப்படியாக அனுமதித்த இடங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அதனையும் எடுத்தால் இந்த எண்ணிக்கை 50,000-க்கும் மிகும். இருப்பினும் இந்த மாணவர்களின் நலனை மனதில் கொண்டு இவர்களுக்குக் குறுகிய காலப் பயிற்சி (Short term course) ஒன்றினை அளிக்க 286 அரசினர் மேல்நிலைப் பள்ளிகளில் அரசாணை நிலை எண் 685, கல்வி நாள்: 16-7-1993-ன் வாயிலாகத் தொடங்கப்பட்டது. இதனையும் எதிர்த்து சில நிர்வாகத்தினர் உயர்நீதி மன்றம் சென்றனர். இந்த வழக்கை விசாரித்த உயர்நீதி மன்றம் அரசாணை நிலை எண் 685, கல்வி நாள்: 16-7-1993-ல் வெளியிடப்பட்ட உத்தரவு செல்லத் தக்கதல்ல என்று 31-1-1994 அன்று தீர்ப்புக் கூறிவிட்டது. இதனால் மேற்குறிப்பிட்ட மாணவர்களுக்கு எந்தவிதப் பரிகாரமும் செய்ய முடியவில்லை.

இதே பிரச்சினை 28-6-1994 அன்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கூட விவாதிக்கப்பட்டது. இந்த மாணவர்களின் பிரச்சினையில் சட்டப் பிரச்சினை எழுவதால் இவர்களது பிரச்சினையை இத்தோடு முடித்துக் கொள்ளலாம் என முடிவெடுக்கப்பட்டது.

இதன் பின்னர் ஆசிரியர் கல்வியானது இனி `National Council for Teacher Education' என்ற அமைப்பின் கீழ் கொண்டுவரப்படுமெனத் தெரிவித்து மைய அரசு சட்டமொன்றினை இயற்றி அந்தச் சட்டமும்

1996 ஆகஸ்ட் 21] [பேராசிரியர் க. அன்பழகன்]

1-7-1995 முதல் அமலுக்கு வந்தது. ஆதலின் இந்த மாணவர்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியுமா என National Council for Teacher Education-க்கு 19-1-95 அன்று கடிதம் எழுதப்பட்டது. National council for Teacher Education-னும் இந்த மாணவர்களின் பிரச்சினையில் தலையிட விரும்பவில்லை. இந்தப் பிரச்சினையை National Council for Teacher Education விதிக்குட்பட்டு மாநில அரசே தீர்த்துக்கொள்ளலாமெனவும் கூறிவிட்டது. இந்த மாணவர்களின் பிரச்சினையில் சட்டச் சிக்கல்கள் (அதாவது உயர்நீதி மன்றத் தீர்ப்பு/உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராகச் செயல்படுவது) உள்ளதால் மாநில அரசும் 28-6-1994 அன்று நடந்த அமைச்சரவை முடிவையே தொடரலாம் எனக் கருதி இந்த பிரச்சினையை முடித்துக் கொண்டது.

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் ஐந்து இலட்ச ரூபாய் கொடுத்தால் ஒரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியைப் பெறலாம் என்கிற ஒரு சூழ்நிலை இருந்தது. அதன் காரணமாக 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் அந்த ஆட்சியில் பாதிக்கப்பட்டு, இன்றைக்குத் தெருவிலே நின்று கொண்டிருக்கிறார்கள். இவர்களை மூன்று பிரிவினர்களாகப் பிரிக்கலாம். ஒன்று, இரண்டு ஆண்டு படித்து, தேர்வு எழுதி சான்றிதழ் பெறமுடியாதவர்கள்; இரண்டாவது பிரிவினர், ஓராண்டு படித்துவிட்டு, இரண்டாம் ஆண்டு தொடர முடியாமல் உள்ளவர்கள்; மூன்றாவது பிரிவினர் 6 மாத கால அளவுக்குப் படித்துவிட்டு மேற்கொண்டு படிக்க முடியாமல் சிரமப்படுகின்றவர்கள். எனவே, இதைப்போன்ற ஒரு அவல நிலை தொடருவதைத் தவிர்ப்பதற்காகத் தான் 1989-ஆம் ஆண்டு நீங்கள் கல்வி அமைச்சராக இருந்தபோது அரசாணை எண் 535 மற்றும் 536 ஆகியவற்றின்கீழ் இவைகளை எல்லாம் ஒழுங்குபடுத்துவதற்காக ஒரு சட்டம் கொண்டு வந்தீர்கள். ஆனால் அது, அதன் பிறகு உயர்நீதி மன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு துறையாலும் மீறப்பட்டு, 50 ஆயிரத்திற்கும் மேல் மாணவர்கள் இந்தக் கல்விக் கூடங்களிலே சேர்ந்திருக்கிறார்கள். இங்கே நீங்கள் அரசாங்கத்தினுடைய அறிக்கையாக இதை வைத்திருக்கின்றீர்கள். இந்த அறிக்கையிலே கூறுகின்றபோது, இதே பிரச்சினை 28-6-1994 அன்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில்கூட விவாதிக்கப்பட்டது...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ச. அழகிரி: சரி; இந்த மாணவர்களின் பிரச்சினையில் சட்டப் பிரச்சினை எழுவதால் இவர்களது பிரச்சினையை இத்தோடு முடித்துக் கொள்ளலாம் என முடிவெடுக்கப்பட்டதாகச் சொல்லியிருக்கின்றீர்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொஞ்சம் கண்டிப்பானவர்

[திரு.ச. அழகிரி] [1996 ஆகஸ்ட் 21

என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். ஆனாலும், இந்த விஷயத்தில் இவ்வளவு கண்டிப்பாக நீங்கள் இருப்பீர்களேயானால், அந்த 50 ஆயிரம் மாணவர்களுடைய வாழ்க்கை நிலை என்னஆவது என்பதனைப் பற்றித் தயவுசெய்து மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், பழைய அரசாங்கத்தினால் பெறப்பட்ட பாவக் குழந்தைகள்தான் இந்த 50 ஆயிரம் மாணவர்களும். கல்விக் கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டதைப் பற்றியோ கல்விக் கூடங்களில் படித்ததைப் பற்றியோ நமக்கு மாற்றுக் கருத்து கிடையாது. அவைகள் எல்லாம் தவறான முறையில் கொண்டுவரப்பட்டவைகள்தான். ஆனால், அரசாங்கம் சொல்லியிருப்பதை நம்பித்தான் அந்த மாணவர்கள் எல்லாம் அந்தப் பள்ளிகளிலே சேர்ந்து படித்திருக்கிறார்கள். அன்றைக்கு இருந்த அரசாங்கம் ஒன்றைச் சொன்னது, ஆரம்பிக்கப்பட்ட இருக்கிற கல்விக் கூடங்கள் உண்மையானவைதானா என்பதனை முதன்மைக் கல்வி அதிகாரி அவர்களிடம் சென்று உறுதிப்படுத்திக்கொண்டு மாணவர்கள் அப்பள்ளிகளிலே சேரலாம் என்று, எனவே, இப்படி முதன்மைக் கல்வி அதிகாரியை நேரிலே சந்தித்து, அவை உண்மையானவைதான் என்று தெரிந்து அதன்பிறகுதான் அந்த மாணவர்கள் அங்கே போயிருக்கின்றார்கள், எனவே, அப்படிப் போயிருக்கின்ற மாணவர்கள் 50 ஆயிரம் பேர்கள் இன்றைக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை மீறி எப்படிச் செயல்படுவது என்று கல்வி அமைச்சர் அவர்கள்தான் கேட்கிறார்கள். அதுவும் உண்மைதான். அடிக்கடி முதல்வர் அவர்கள். ‘மணிலாவிற்கும் களை எடுத்ததுபோல் இருக்க வேண்டும், சித்தப்பனுக்கும் பெண் பார்த்துபோல் இருக்க வேண்டும்’ என்று சொல்வார்கள். எனவே, நீதிமன்ற அவமதிப்புக்கும் ஆளாகாமல், பாதிக்கப்பட்ட அந்த மாணவர்களுக்கும் ஒரு விடிவு ஏற்படுவதற்கு ஒரு வழிகாண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உதாரணமாக, இப்போது பி.எட். படிப்பைக்கூட அஞ்சல் வழிக் கல்வி மூலமாகப் பயிலுகின்றார்கள். அதற்கான ஒரு வழிமுறை அரசாங்கத்திலே இருக்கிறது. எனவே, நாம் இந்தப் பிரச்சினையில் பாதிக்கப்பட்டிருக்கிற 50 ஆயிரம் மாணவர்களுக்கு மட்டும் ஓராண்டு காலத்திற்கு அஞ்சல் வழிக் கல்வி மூலமாக அவர்களுக்கு ஒரு பயிற்சியைக் கொடுத்து, அவர்களைப் படிக்க வைக்க சட்டமுன்வடிவு ஒன்றைக் கொண்டுவந்து, அப்படி 50 ஆயிரம் மாணவர்கள் படித்து முடித்த பிறகு அவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கி, அத்தோடு அந்த அஞ்சல் வழிக் கல்வியை முடித்துக் கொள்ளலாம்.

1996 ஆகஸ்ட் 21] [திரு. ச. அழகிரி]

எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான முயற்சியைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 11-45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் சட்டமன்ற மரபுகளை நன்கு உணர்வார்கள். எனவே இதுபோன்ற கவன ஈர்ப்புகளில் இரண்டு வினாக்கள் மட்டும்தான் தொடுக்க வேண்டும் என்ற விவரம் அவர்களுக்குத் தெரியும். தவறான முன் உதாரணமாக அவர்கள் தந்தால், இதுபோல கவன ஈர்ப்பு பின்னால் வருகிறபோது, அனைவரும் அதையே பின்பற்றுவார்கள். எனவே அழகிரி அவர்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையிலே உள்ள சிக்கலை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் நல்ல முறையிலே உணர்ந்து, பிள்ளைக்குப் பெண் பார்த்தது போலவும் இருக்க வேண்டும்; பயிருக்குக் களை எடுத்தது போலவும் இருக்க வேண்டும் என்று ஏதோ ஒரு தந்திரமாகச் செய்ய முடியாதா என்னும் கருத்தில் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். நம்முடைய தந்திரம்கூட பலிக்காத அளவுக்கு ஒரு நிலைமை இன்றைக்கு இருக்கிறது. ஏனென்றால், உயர் நீதி மன்றத்தில் அந்தப் பள்ளிக்கூடங்களை அரசு அனுமதித்தது தவறு என்று முடிவு தரப்பட்டது. இன்னும் ஒரு வகையிலே சொல்லப்போனால், இந்தப் பயிற்சிப் பள்ளிகட்கான விதிமுறைகள் 17-5-1989-இல், தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தீர்மானிக்கப்பட்டது. இதற்கு முன்னாலே நடைபெற்ற பள்ளிக்கூடங்களில் சில பள்ளிக்கூடங்கள் முறையாக நடக்கவில்லை என்று நாங்கள் கேள்விப்பட்டு, இதனை முறைப்படுத்துவதற்காக சில விதி முறைகள் இருக்க வேண்டுமென்றும், முறையாக இயங்காத சிலவற்றை மூட வேண்டுமென்றும் ஒரு முயற்சி எடுத்துக்கொண்டு, 5, 6 பள்ளிக்கூடங்கள் மூடப்படுகின்ற நிலைமைகளை அப்போதே நாங்கள் ஏற்படுத்தியிருந்தோம்.

[பேராசிரியர் க. அன்பழகன்] [1996 ஆகஸ்ட் 21

நான் அமைச்சராக இருந்தபோது, திரு. இராஜேந்திரன் போன்ற எனக்கு வேண்டிய நண்பர்கள் சிலர் பயிற்சிப் பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டபோது, இது தவறான முறை, இதற்கு நீங்கள் எந்த ஏற்பாடும் செய்யக் கூடாது, நாட்டுக்கு ஏதாவது நீங்கள் நல்லது செய்ய வேண்டுமானால், ஒரு மாட்டுப் பண்ணையை அந்தப் பணத்தைக் கொண்டு வைப்பீர்களேயானால், நாட்டுக்கு நல்லது. இது தீங்கு செய்வது என்றெல்லாம் சொல்லி அனுப்பியிருக்கிறேன். நம்முடைய அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு யாருக்கும் அனுமதி இல்லை என்று அறிவித்து, அதைக் தடைபிடித்தது. அ.இ.அ.தி.மு.க. அரசு வந்ததற்குப் பின்னால், அவர்களே பத்திரிகையிலே ஒரு விளம்பரத்தை வெளியிட்டார்கள். யாருக்கும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கூடங்கள் அனுமதி கிடையாது என்று அறிவித்தார்கள். சில தனியார் பள்ளிக்கூடங்கள், சிறுபான்மை சமூகத்தின் சார்பாக ஏற்படுத்தப்பட்ட பள்ளிகள், அந்த உரிமை கோரலாம் என்ற அடிப்படையில் நீதிமன்றத்திலே போய் உரிமை கோரினார்கள். நம்முடைய ஆட்சிக்குப் பின்னால், அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அப்படிச் சில பள்ளிக்கூடங்கள் அனுமதிக்கப்பட்டன. அதைச் சாக்காக வைத்துக்கொண்டு, அரசு பல நூற்றுக்கணக்கான பள்ளிக்கூடங்களை அனுமதித்தது. அப்படி அனுமதித்த போதுதான் முறைகேடுகள் நடைபெற்றன. பள்ளிக்கூடம் நடத்துவதற்குத் தேவையான அடிப்படை வசதி இருக்கிறதா, ஆசிரியர்களை நியமிப்பார்களா, பயிற்சி நடைபெற முடியுமா? பயிற்சி தருவதற்குத் துணையாக ஒரு நல்ல பள்ளிக்கூடம் ஏற்கெனவே நடத்தப் படுகிறதா என்றெல்லாம் கவனிக்கப்படாமல் முறையின்றி அனுமதி வழங்கப்பட்டது. அவைகளிலே சேர்ந்த மாணவர்கள்தான் இங்கே திரு. அழகிரி அவர்கள் குறிப்பிட்ட அந்த மாணவர்கள், அவர்களைப் பள்ளிக்கூடம் இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டு சேருங்கள் என்று சொன்னது, மாணவர்கள் தாங்கள் சேர வேண்டுமென்று முயற்சிக்கிறபோது ஏற்றுக்கொள்ளப்பட்ட பள்ளிக்கூடமா என்று பாருங்கள் என்று சொன்னது, அரசு அங்கீகரித்து இருக்கிறதா என்று பாருங்கள் என்றுதான் பொருள். அரசு அங்கீகரித்ததே முறைகேடாக அங்கீகரித்திருக்கிறது. திரு. அழகிரி அவர்கள் சொன்னதைப் போல ரூ. 5 இலட்சம் மட்டுமல்ல 7, 8, இலட்சம் கொடுத்து பலபேர் வாங்கியிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் பள்ளிக்கூடம் நடத்தப் போகிறோம் என்றுகூடச் சொல்லவில்லை, பள்ளிக்கூடம் வாங்கியிருக்கிறோம் என்று சொன்னார்கள். அப்படிச் சொல்லி மொத்தம் ஏறத்தாழ 219 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் திறக்கப்பட்டன. அவை முறையாக எல்லா விதிகளையும் பின்பற்றித் திறக்கப்படாத காரணத்தால்

1996 ஆகஸ்ட் 21] [பேராசிரியர் க. அன்பழகன்]

நீதிமன்றம் 27-4-1993 அன்று அவற்றை ரத்து செய்துவிட்டது. ரத்து செய்ததற்குப் பின்னர் பயிற்சி நடைபெற்றிருக்கக்கூடாது. நடைபெற்றாலும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. அப்படிப் பயிற்சி சரியாக நடைபெறாத நிலையில் அதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் தொடங்கிய சில பள்ளிக்கூடங்களில் சேர்ந்தவர்கள் தேர்வு எழுதுவதற்கு அனுமதி கேட்டார்கள். அந்தத் தேர்வு எழுதுவதற்கு நீதிமன்றத்திலே அனுமதி கிடைத்தது. தேர்வு எழுத அனுமதித்ததே தவறு என்று சுப்ரீம் கோர்ட் அதனுடைய தீர்ப்பிலே குறிப்பிட்டிருக்கிறது.

முற்பகல் 11-50

உச்ச நீதிமன்றத்திலே பல தீர்ப்புகள், இப்படிப்பட்ட முறைகேடான கல்வி நிலையங்கள் தோன்றக் கூடாது என்ற வகையில், அதைத் தடுத்து நிறுத்துவதற்கான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு இருக்கிறபோது, தேர்வு எழுதுகிற அளவுக்கு உயர்நீதிமன்றம் அனுமதித்ததுகூட நிர்வாகத்திற்கும், மாணவர்களுக்கும், கல்வி நிறுவனத்திற்கும், எல்லோருக்கும் செய்கிற ஒரு தீங்கு ஆகிறது என்ற கருத்து சுப்ரீம் கோர்ட் தீர்ப்பிலே தெளிவாகச் சுட்டப்பட்டு, நீதிமன்றத்தில் தேர்வு எழுதுவதற்கு அனுமதித்ததே தவறு என்ற எண்ணத்தை உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வழங்கி இருக்கிறது. இதிலே மாணவர்கள்-என்னுடைய கருத்துப்படி தகுந்த பயிற்சி அளிக்கப்படாத நிலையில் தேர்வு எழுதிய மாணவர்கள்-ஏறத்தாழ 15,270 பேர். அவர்களுக்கு, தேர்வு எழுதினாலும் சான்றிதழ் வழங்கக்கூடாது; அப்படி ஒரு சான்றிதழ் ஏதேனும் பெற்றாலும் அதை வைத்து எந்த உரிமையும் கோரக்கூடாது என்ற கருத்து உயர் நீதிமன்றத்திலே மறுபடியும் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. சான்றிதழ் வழங்கக்கூடாது என்ற உயர் நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையிலேதான் வழங்காமல் நிறுத்தப்பட்டு இருக்கிறது. அது 15 ஆயிரம் பேர். ஓராண்டுப் பயிற்சி கூட முடிக்காதவர்கள் 8,888 பேர். ஆகவே அவர்கள் பயிற்சி பெற்றதாகவே ஏற்றுக்கொள்ளப்பட முடியாது. இரண்டாம் ஆண்டு பயிற்சி முடிக்காதவர்கள், ஓராண்டு முடித்தவர்கள் 4,208 பேர். இந்த எண்ணிக்கையில் சில வேறுபாடுகள் இருக்கலாம். இருந்தாலும் ஒரு பள்ளிக்கூடத்திலே ஒரு வகுப்பில் 40 பேர்தான் சேர்க்கலாம் என்பது ஒரு விதி. பள்ளிக்கூடமே முறையில்லாமல் தொடங்கப்பட்ட நிலையில், அந்தப் பயிற்சிக்கு சேர்க்கப்பட்ட மாணவர்களுடைய எண்ணிக்கை 40 என்பது 50 ஆகக்கூட இருக்கலாம்; ஆனாலும்கூட இப்படிப் பாதிக்கப்பட்டவர்களுடைய எண்ணிக்கை இரண்டாம் ஆண்டு பயிற்சி முடிக்காதவர்கள் 4208 பேர்; முதலாண்டே முடித்தவர்கள் 8,888 பேர்; இவர்களைப் பயிற்சி முடித்ததாகக் கருதிப் பார்க்கவே எந்த இடமும் கிடையாது.

[பேராசிரியர் க. அன்பழகன்] [1996 ஆகஸ்ட் 21

இன்னும் ஒன்று. தேர்வு எழுதியவர்களுக்குத் தரப்படவேண்டிய சான்றிதழ்களைக் கொடுத்துவிட்டு, அதற்குப் பின்னர் ஏதேனும் பயிற்சி வழங்கலாமா என்று எண்ணிப்பார்ப்பதற்கு, நீதிமன்றம், சான்றிதழ் வழங்குவதற்குத்தடை விதித்து இருக்கிற காரணத்தால், அதைச் செய்வதற்கு வழி இல்லை. ஒருவேளை நீதிமன்றத்திலே போய் நாம் கேட்டால்கூட, இந்த மாணவர்களுக்குத் தகுந்த பயிற்சி இல்லாமல் சான்றிதழ் வழங்கச் சொல்லி அரசே அதற்கு அனுமதி கேட்டால்கூட, ஏற்கனவே இந்தப் பள்ளிகள் முறைகேடாக நடத்தப்படுகின்றன என்று வழக்குத் தொடுத்து, தங்களுடைய உரிமை அதனால் பறி போகிறது என்று சொன்னவர்கள் அதிலே குறுக்கிட்டு வாதாட முடியும்; குறுக்கிட்டு வாதாடுவார்களே யானால், அவர்கள் பக்கம் உள்ள நீதியைக் கருதி, நீதிமன்றம் இந்தச் சான்றிதழ்களை ஏற்றுக்கொள்ளாது. ஆகவே, இந்த நிலையில் ஏறத்தாழ 28 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதற்காக நான் ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்தாலுங்கூட, என்னால் களை எடுக்கவும் முடியவில்லை; பெண் பார்க்கவும் முடியவில்லை.

4. அறிவிப்பு

மாநில நூலகக் குழுவுக்கு உறுப்பினர் தேர்ந்தெடுத்தல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு மாநில நூலகக் குழுவுக்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கக் கோரிக்கை வந்துள்ளது. அதற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினரின் பதவிக் காலம் 3 ஆண்டுகள் ஆகும். தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவது ஒரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு அவருடைய உறுப்பினர் பதவியும் முடியும். தேர்ந்தெடுக்கப்பட விழையும் வேட்பாளர்கள் தங்கள் நியமனத் தாள்களை 24-8-1996, சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனத்தாள்கள் 26-8-1996, திங்கட்கிழமை பிற்பகல் 3-00 மணிக்குள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 27-8-1996, செவ்வாய்க்கிழமை 3-00 மணிக்கு விலகிக் கொள்ளலாம். நியமனம் செய்யப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை, வெற்றிடத்தின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 30-8-1996, வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கும், பிற்பகல் 2-00 மணிக்கும் இடையே சென்னை சட்டமன்றப் பேரவைச் செயலகத்தில் உள்ள குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS